**பொள்ளாச்சி நகராட்சி**

**சிறப்புக் கூட்டம்**

**17.03.2023 தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு பொள்ளாச்சி நகராட்சி நகரமன்ற கூட்டரங்கில் நடைபெற்ற சிறப்புக் கூட்ட நடவடிக்கைகள்.**

| வ. எண் | பொருள் விபரம் | தீர்மானம் |
|---|---|---|
| 1 | நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண்.52 (ந.நி.4) நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 40032/2012/ஆர்.1 நாள். 01.04.2022 ன்படி பொது சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டது. அதன்படி, வரப்பெற்ற அரசாணையை நகர்மன்றத்தின் பதிவுக்கு வைக்கப்பட்டு நகர் மன்ற தீர்மான எண்.24, 25 நாள்.11.04.2022 ல் பதிவு செய்யப்பட்டது. இந்நிலையில் 2022–2023ம் ஆண்டு முதல் 15 வது மத்திய நிதி ஆணையத்தின் மான்யம் பெற உள்ளாட்சி அமைப்புகளின் ஆண்டு வருவாயில் சொத்துவரியானது எவ்வளவு வசூலிக்கப்படுகிறது என்றும் அதன்படி வசூலிக்கப்படும் தொகையானது பணியாளர்களின் ஊதியம், ஓய்வூதியம், தூய்மைப் பணிக்கு ஏற்படும் செலவினம், குடிநீர் விநியோகத்திற்காக ஏற்படும் செலவினம் மற்றும் மின் இணைப்புகளுக்கான செலவினம் ஆகியவைகளை கருத்தில் கொள்ள குழு நிர்ணயம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் நகராட்சியின் வருவாய் போதுமானதாக இல்லை என்பதாலும், விடுபட்டுள்ள வீதிகள் மற்றும் கட்டிடங்கள் ஆகியவற்றை மாற்றி வார்டு மறுவரையறை செய்து அதன் அடிப்படையில் மண்டல மதிப்பீடு மாற்றி அமைக்க ஆணையிடப்பட்டது.<br>அதன்படி, கீழ்கண்டவாறு வரி சதவிகிதம் உயர்வு செய்ய தெரிவிக்கப்பட்டது.<br>1. 600 சதுரடி வரையிலான பரப்பளவு உள்ள | **தீர்மானம் எண்.475**<br>1. சொத்துவரி சதவீதத்தை குறைக்க நகர்மன்றத்திற்க்கு அதிகாரம் வழங்க அரசுக்கு பரிந்துரை செய்யலாம்.<br>2. நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரின் வேண்டுகோளின் படி பொதுமக்களின் நலன் கருதி சொத்து வரி மற்றும் காலியிட வரி சீராய்விற்கான மண்டல அடிப்படை சதவீத மதிப்பினை கீழ்க்கண்டவாறு மாற்றி அமைக்கப்படுகிறது.<br>1. / 600 சதுரடி வரையிலான பரப்பளவு உள்ள கட்டிடங்களுக்கு / 25% விகிதம்<br>2. / 601 – 1200 சதுரடி வரை உள்ள பரப்பளவு கட்டிடங்களுக்கு / 35% விகிதம்<br>3. / 1201 – 1800 சதுரடி வரை உள்ள பரப்பளவு கட்டிடங்களுக்கு / 50 % விகிதம்<br>4. / 1800 க்கு மேல் உள்ள பரப்பளவு கட்டிடங்களுக்கு / 60% விகிதம்<br>5. / வணிக பயன்பாடு கட்டிடங்களுக்கு / 50% விகிதம்<br>6. / தொழிற்சாலை, சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு / 50% விகிதம் |

| | | |
|---|---|---|
| | கட்டிடங்களுக்கு 25% விகிதம்<br>2. 601 – 1200 சதுரடி வரை உள்ள பரப்பளவு கட்டிடங்களுக்கு 50% விகிதம்.<br>3. 1201 –1800 சதுரடி வரை உள்ள பரப்பளவு கட்டிடங்களுக்கு 75% விகிதம்.<br>4. 1800 க்கு மேல் உள்ள பரப்பளவு கட்டிடங்களுக்கு 100% விகிதம்.<br>5. வணிக பயன்பாடு கட்டிடங்களுக்கு 100% விகிதம்.<br>6. தொழிற்சாலை, சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு 75% விகிதம்<br>7. காலிமனைவரி அனைத்திற்கும் 100% விகிதம் உயர்வு செய்யப்பட வேண்டும் என ஆணை இடப்பட்டுள்ளது.<br>எனவே இது குறித்து பொது மக்களின் கருத்து பெற செய்திதாள் விளம்பரம் மற்றும் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யவும் அனுமதி வழங்கப்பட்டதை ஏற்று தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் 14.04.2022 மற்றும் 21.04.2022 அன்று விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட்டது. இந்நிலையில் அனைத்து கட்சி பிரமுகர்கள், தன்னார்வளர்கள், மன்ற உறுப்பினர்கள், விவசாய பொதுமக்கள் மற்றும் வணிகர்கள் சங்கம், பொது மக்கள் ஆகியோரின் ஆட்சேபணை மனுவானது 257 எண்ணிக்கை பெறப்பட்டுள்ளது.<br>இந்நிலையில் பெறப்பட்ட ஆட்சேபணைகளில் ஏற்கனவே உள்ள மண்டல மதிப்பீட்டுடன் தற்பொழுது உள்ள அரசாணை நிலை 52–ல் தெரிவிக்கப்பட்ட வழிகாட்டுதலின்படி, வார்டு மறுவரையறை செய்யப்பட்டு மண்டல மதிப்பீடு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு நகர்மன்ற தீர்மான எண். 184 நாள். 08.06.2022 ஒப்புதல் பெறப்பட்டது.<br>தொடர்ந்து இந்நகராட்சி மன்றத் தீர்மான எண் 183 நாள். 08.06.2022 ன் படி சொத்துவரி விகிதத்தை | <table><tr><td>7.</td><td>காலியிட வரி நிலங்களுக்கு</td><td>60% விகிதம்</td></tr></table>மேற்கண்ட சொத்துவரி மற்றும் காலியிடவரி சீராய்விற்கான மண்டல அடிப்படை சதவீத மதிப்பு நிர்ணயம் செய்ய இந்நகராட்சியில் 31.03.2022 வரை ஏற்கனவே உள்ள அனைத்து சொத்து வரி மற்றும் காலியிட வரி, வரியினங்களுக்கு புதியதாக சொத்து வரி மற்றும் காலியிடவரி விதிப்பு செய்ய உள்ள வரியினங்களுக்கும் அட்டவனையில் கண்டுள்ளவாறு அரை வருடத்திற்ககான சொத்துவரி மற்றும் காலியிட வரியினை சீராய்வு செய்து மண்டல சதவீத மதிப்பு குறைத்து நிர்ணயம் செய்து கொள்ள அரசிடம் முன் அனுமதி பெற ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | மாற்றியமைத்து தீர்மானம் நிறைவேற்றியதை அரசு ரத்து செய்வதாக கருதி , ஏன் ரத்து செய்யக்கூடாது என்பதற்கான விளக்கத்தை கேட்ட நிலையில் மீண்டும் நகர்மன்றம் கூடி தனது தீர்மான எண் 426 நாள்.10.01.2023 இன் படி தீர்மான எண் 183 நாள்.08.06.2022– ஐ ரத்து செய்திட தீர்மானித்து அரசாணை நிலை எண் 52 நாள்.30.03.2022 இன் படி நடவடிக்கை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.<br>தொடர்ந்து தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 81–A உட்பிரிவு (3) இன் படி இந்நகர்மன்ற தீர்மான எண் 184 நாள்.08.06.2022 ம் நாளைய தீர்மானத்தில் கண்ட வரிவிகிதத்தை (Rate of Tax) மாற்றி அமைப்பது குறித்து மன்றம் பரிசீலித்து முடிவெடுத்து அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்புவது குறித்து முடிவெடுத்தல்.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும்<br>**ந.க.எண்.1960/2022/அ1** | |

**(ஒப்பம்) திருமதி.ந.சியாமளா**
**நகர்மன்ற தலைவர்**
**பொள்ளாச்சி நகராட்சி**

**//உண்மை நகல்//**

**ஆணையாளர்**
**பொள்ளாச்சி நகராட்சி**